ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை
අති විශෙෂ    அதிவிசேஷமானது
අංක 1805/28 - 2013 අප්‍රේල් 10 වැනි බදාදා - 2013.04.10
*1805/28 ஆம் இலக்கம் - 2013 ஆம் ஆண்டு ஏப்பிறல் மாதம் 10 ஆந் திகதி புதன்கிழமை*
(அரசின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி III - காணிகள்

## காணி கொள்வனவு  பற்றிய அறிவித்தல்கள்

**காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)**

7 ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

எனது இல. பிரீபீ/எல்என்டீ/ஏசீகியுவீஜ/7/23.

ஒரு பகிரங்கத் தேவைக்கு வேண்டியதான கீழ்க்காணும் காணியை எடுத்துக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார்கள் என்பதை காணி எடுத்தற் சட்டத்தின் (அத்தியாயம் 460) 7 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் கீழ் நான் இத்தால் அறிவிக்கின்றேன்.

எடுத்துக்கொள்ளவிருக்கும் காணியின் விபரம் :

மாத்தறை மாவட்டத்தில், பிட்டபெத்தர பிரதேச செயலாளர் பிரிவில், மொரவக் கோரளை பிட்டபெத்தர கிராம அலுவலர் பிரிவில் அமைந்துள்ள நிலஅளவையாளர் நாயகத்தினால் தயாரிக்கப்பட்ட வரைபட இல. 6 தாள் இல. 18 பிற்சேர்க்கை இல. 17 மற்றும் 2013.03.11 ஆந் திகதிய 0.0051 ஹெக்டயார் விஸ்தீரணமுடைய துண்டு இல. 400 'முருக்கன் தொல ஹேன' எனும் காணித்துண்டின் விபரங்கள் பின்வருமாறு :

*01. துண்டு இல. 400*
காணியின் பெயர் : முருக்கன்தொல ஹேன ; விபரம் : வீட்டுத் தோட்டம், நிரந்தரக் கட்டிடம் காணப்படுகின்றது; உரிமை கோருபவர்: டபிள்யூ. எச். லலித் மகிந்தசிரிசந்தன கொரகவெல பிட்டபெத்தர ; விஸ்தீரணம் : 0.0051 ஹெக்டயார்.

மேற்குறித்த காணிக்கு உரித்துப்பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது முறைப்படி எழுத்தில் அதிகாரம் அளிக்கப்பட்ட காரியக்காரர் மூலமாக 2013 ஆம் ஆண்டு யூன் மாதம் 10 ஆந் திகதி மு. ப. 10.00 மணிக்கு பிட்டபெத்தர பிரதேச செயலகத்தில் என்முன்பாக வெளிப் படுத்தும்படியும் அக்காணியில் அவர்களுக்குள்ள உடந்தைகளின் தன்மையையும் குறித்த காணியை எடுத்தற்கான நஷ்டஈடு பற்றிய அவர்களின் கோரிக்கைகளின் விபரங்களையும், நஷ்டஈட்டுத் தொகையையும், அத்தொகை கணிக்கப்பட்ட விபரங்களையும் 2013 ஆம் ஆண்டு யூன் மாதம் 03 ஆந் திகதிக்கு முன்னர் எழுத்தில் இரு பிரதிகளாக எனக்கு அறிவிக்கும்படியும் இத்தால் கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

கே. ஜீ. ஆர். ஜயநாத்,
பிரதேச செயலாளர்,
பிட்டபெத்தர.

பிரதேச செயலகம்,
பிட்டபெத்தர,
2013.04.03.

04-791